Pastoral Letter No/GR/54/2026

ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருட்தந்தையர்களே, துறவறத்தாரே மற்றும் இறைமக்களே, நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் அருளும் தந்தையாம் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக

நாம் தவக்காலத்தின் இறுதி நாட்களில் நுழைய உள்ளோம். அடுத்த வாரம் ஓசன்னா ஞாயிறு. தொடர்ந்து புனித வாரத்தை அனுசரிக்கிறோம். பாஸ்கா மறைபொருள் எனப்படும் ஈசோவின் பாடுகள், இறப்பு, அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை இந்நாட்களில் அனுசரிக்கிறோம். இவையே கிறிஸ்தவ வாழ்வின் மையமாகும். இதை அடிப்படையாகக் கொண்டு தான் கிறிஸ்தவ நம்பிக்கையானது இயங்குகிறது. இதில் மிகவும் முக்கியமானத் திருநாளாக, இயேசுவின் உயிர்த்தெழுதல் விளங்குகிறது. இதுவே கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரைக்கும் மிகப்பெரிய திருவிழா. இந்நாளில், இருளையும், சாவின் ஆதிக்கங்களையும் வென்று பேரொளிச்சுடராக இயேசு உயிர்த்தெழுந்ததை கொண்டாடுகிறோம். முதல் நூற்றாண்டில் உருப்பெற்ற, கிழக்கத்திய-சிரியன் சபையான கல்தேய சபையின் மரபை ஏற்றிருக்கும் சீரோ-மலபார் சபையில், பாஸ்கா விழா மிகவும் முக்கியத்தும் பெற்றதாகக் கருதப்படுகிறது. இந்நாட்கள், ஈசோவை சந்திக்கும் நாட்களாகவும், அவரால் உருமாற்றம் அடையும் தருணங்களாகவும் இருக்கின்றன. ஆகவே, அர்த்தமிக்க விதத்தில் இந்நாட்களை கொண்டாடும் நோக்கத்தில், இம்மடலை நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

மீட்பின் மறைபொருள்

புனித வாரம் ஓசன்னா ஞாயிறுடன் தொடங்குகிறது. அந்நாளில், ஈசோ, கழுதை மேல் ஏறி, மக்கள் புடைசூழ எருசலேமுக்குள் நுழைந்ததை நாம் கொண்டாடுகிறோம். இதில் முரண் என்னவென்றால், மக்களின் வெற்றி ஆர்ப்பரிப்புடன், எருசலேமில் நுழைந்த ஈசோவை, அதே மக்கள் ஓரிரு நாட்களுக்குள் மறுதலித்து விடுகிறார்கள். ஓசான்னா எனப் பாடியவர்கள் “இவன் ஒழிக, சிலுவையில் அறையும்” என்று கத்துகிறார்கள். மேலும் சில முரண்கள் உள்ளன. அரசர்கள், வழக்கமாக குதிரைகளில் செல்வார்கள், ஆனால் ஈசோவோ, கழுதையின் மேல் செல்கிறார். அது எளிமையை குறிக்கிறது. எளிய மக்களோடு தம்மையே ஐக்கியப்படுத்தியதை எடுத்துக் காட்டுகிறது. இச்செயல் உலகோர் பார்வையில் வலுவற்றவையாக இருப்பவற்றை வலுப்பெற்றவையாக மாற்றும் ஆற்றல் கடவுளுக்கு உண்டு என்பது தெளிவு படுத்தப்படுகிறது.

புனித வாரம் பாஸ்கா வியாழன், புனித வெள்ளி மற்றும் உயிர்ப்பு ஞாயிறு ஆகிய மூன்று முக்கிய நாட்களை உள்ளடக்கியது. பாஸ்கா வியாழன் அன்று, ஈசோவின் இறுதி உணவு, காலடிகளைக் கழுவதல், நற்கருணை மற்றும் குருத்துவம் நிறுவுதல், ஆகியவற்றை ஆடம்பரமான திருப்பலியுடன் அனுசரிக்கிறோம். இது, ஈசோ நிறுவ இருந்த புதிய உடன்படிக்கையான அடையாளமாக மாறுகிறது. அதுபோல, ஈசோ கல்வாரியில் தன்னுடைய உடலையும் இரத்தத்தையும் கொடுப்பதனுடைய முன்னடையாளமாகவும் திகழ்கிறது. ஆகையால், புனித வெள்ளியானது பாஸ்கா விழாவோடு தொடர்புடையது. புனித வெள்ளி இன்றி, பாஸ்கா வியாழன்

நிறைவு பெறாது. உலகின் பாவங்களைப் போக்குகின்ற, செம்மறியான ஈசோ, புனித வெள்ளி அன்று சிலுவையில் தம்மையே பலியாக ஒப்புக் கொடுக்கிறார். பாஸ்கா வியாழன் அன்று, **"இது என் உடல், இது என் இரத்தம்"** என்ற வார்த்தைகளால் கூறப்பட்டவை, இங்கே செயல்வடிவம் பெறுகின்றன. அப்பலியானது, சாவின் அடையாளம் அல்ல மாறாக வாழ்வின் அடையாளம். அவ்வகையில் இயேசுவின் உயிர்த்தெழுதல் அமைகிறது. இயேசு, சாவை வென்று உயிர்த்தெழுந்தார். இதை மத்தேயு நற்செய்தியில் காண்கிறோம். ஞாயிறு அதிகாலை, கல்லறைக்குச் சென்ற பெண்களிடம் வானதூதர்: ''அவர் இங்கே இல்லை அவர் கூறியபடியே உயிருடன் எழுப்பப்பட்டார்'' (மத் 28, 6) என்று கூறுகின்றார். இவ்வாறாக, சாவு வழியாக மீட்பு கிடைக்கிறது. சாபத்தின், அவமானத்தின் அடையாளமாக இருந்த சிலுவையானது மீட்பின் அடையாளமாகவும், வெற்றியின் அடையாளமாகவும், மாட்சியின் அடையாளமாகவும் மாறுகிறது. புனித பவுல், ''சாவு முற்றிலும் ஒழிந்தது வெற்றி கிடைத்தது'' (1கொரி 15, 54) என்கிறார். ஈசோ சாவை முற்றிலும் ஒழித்தார். அவ்வகையில் பார்க்கும் போது, நம்மை அடிமைப்படுத்தும் அனைத்திலிருந்தும் அவர் விடுவித்தார் என அர்த்தம் கொள்ள வேண்டும். அன்பு இறைமக்களே, வெற்றி ஆர்ப்பரிப்பு, நமது தக்கலை மறைமாவட்டத்தின் பங்குகளிலும், சமூகங்களிலும், குடும்பங்களிலும், தனிமனித மனங்களிலும் ஒலிக்கட்டும்.

உயிர்த்தெழுதல் மரபு

சீரோ-மலபார் சபையானது உலகளாவிய திருச்சபையின் உறுப்பினராக இருந்து தனித்துவத்துடன் செயல்பட்டு வருகிறது. இச்சபையின், திருப்பலி, செபங்கள், நோன்புகள், திருவழிபாட்டு ஆண்டு நிகழ்வுகள் ஆகிய அனைத்தும், பழமை வாய்ந்த, கிழக்கத்திய-சிரியன் (கல்தேய) மரபிலிருந்து வருகின்றன. இம்மரபானது, முதல் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டதாக கருதப்படுகிறது. பாஸ்கா விழாவை மையப்படுத்திய வழிபாட்டு முறையைக் கொண்டிருக்கும் நாம்; இவ்விழாவை சிறப்பிக்கும் நோக்குடன் நோன்புகளை அனுசரிக்கிறோம்.

நோன்பு என்பது, சாவிலிருந்து வாழ்வை நோக்கி கடந்து செல்லும் ஓர் அனுபவம். அது ஒரு ஆன்மப் பயணம். ஐம்பது நாட்கள் செபம், தவம், பிறரன்பு என நம்மைத் தயாரித்து போது, நமது பாவங்களையும் நினைக்கிறோம். மனித வாழ்வின் நிலையாமையைப் பற்றிய உணர்வைப் பெறுகிறோம். அதன் வழியாக, சாவை வருவிக்கும், பாவங்களைப் பற்றி மனம் வருந்துகிறோம், அதிலிருந்து விடுதலைப் பெறுவதற்காக பல தியாகங்களை அனுசரிக்கிறோம். அவ்வகையில், அது ஒரு பாலைவன அனுபவமாக உள்ளது. இவ்வனுபவத்தின் உச்சமாக உயிர்த்தெழுதல் விழாவானது அமைகிறது.

பாஸ்கா விழாவின் நிகழ்வுகள் நாம் அன்றாடம் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் அருளடையாள முறையில் நிகழ்வாக்கப்படுகிறது. அதிதூயகத்தின் விரிப்பை மாற்றி, அங்கு ஏற்றப்படும் விளக்குகள் உயிர்த்தெழுதலின் நிகழ்வை நமக்கு உணர்த்துகிறது. வார்த்தைப் பகிர்விற்குப் பிறகு நாம், நற்கருணை மன்றாட்டுகளை ஏறெடுத்து, திருப்பலியைத் தொடர்கிறோம். நாம் திருப்பலியில், காலங்களுக்கு ஏற்றவாறு மூன்று நற்கருணை மன்றாட்டுகளை (அனா∴பரா) சொல்வதுண்டு. அதில் அதிகமாகப் பயன்படுத்தப்படும், திருத்தூதர் தோமாவின் சீடர்களான மார் அத்தாயி மற்றும் மார் மாறி ஆகியோர்களின் நற்கருணை மன்றாட்டானது மிகவும் பழமையானது. இது கிறிஸ்தவ வாழ்வின் மையமான, பாஸ்கா விழாவை சிறப்பான முறையில் நினைவுக்குக் கொண்டு வருகிறது.

எதிர்நோக்குக்காக ஏங்கும் உலகில் உயிர்த்தெழுதலின் மக்களாக மாறிட அழைப்பு

மத்திய கிழக்குப் பகுதியில் போர் நடந்து வருவதை நாம் அறிவோம். பெண்கள், குழந்தைகள் என ஏராளமானவர்கள் கொல்லப்படுகிறார்கள். மருத்துவமனைகள் மற்றும் பள்ளிக் கூடங்கள் கூட தாக்கப்பட்டு, நோயாளிகளும் கல்வி பயிலும் இளம் பிஞ்சுகளும் ஈவிரக்கமின்றி கொல்லப்படுகின்றன. மத்திய கிழக்குப் பகுதியில் வேலைக்கென சென்றிருக்கும் நம்முடைய மக்களுள் பலர், உயிருக்குப் பயந்து வாழ்ந்து வருகிறார்கள். இது ஒரு புறமிருக்க, இந்தியா போன்ற பெரும் மக்கள் தொகை மிகுந்த நாட்டில், வறுமை, வேலையின்மை போன்றவை நிலவுகின்றன. இளையோரில் பலர் தனிமையிலும் மன அழுத்தத்திலும் வாழ்கிறார்கள். குடும்ப உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

உயிர்ப்புத் திருவிழா, ஒளியின் விழா. அது இருளின் மீது ஒளி ஆதிக்கம் செலுத்தியதன் விழா. அவ்வகையில், கிறிஸ்தவர்களாகிய நாம் எதிர்நோக்கின் மக்களாக மாறிட அழைக்கப்படுகிறோம். போர்களால் அவதியுறுவோரையும், தனிமையாலும் வேலையின்மையாலும் வாடும் மக்களையும் நினைவில் கொள்வோம். நம் நடுவில் வாழும் இளையோரைப் பற்றி அக்கரை கொள்வோம். சிக்கல்களை சந்திக்கும் குடும்பங்கள், அதிலிருந்து மீண்டு, உண்மையான அன்பு வாழ்வை வாழ உதவுவோம். துயருறும் மக்கள் அனைவருக்காகவும் செபிப்போம். நமது வாழ்வும் எதிர்நோக்கின் அடையாளமாக மாறட்டும். அதன் வழியாக உயிர்த்த இயேசுவின் சாட்சிகளா நாம் திகழவோம். நமக்கு எதிராக துரோகம் இழைத்தோரையும் நினைத்து அவர்களுக்காகவும் செபிப்போம்.

திருமுழுக்கின் வாக்குறுதிகளை புதுப்பிப்போம்

கிழக்கத்திய மரபில் இயேசுவின் உயிர்த்தெழுதலானது முக்கியத்துவம் பெறுகிறது. மரபுப்படி, நமது திருமுழுக்கானது திருக்காட்சி திருவிழாவோடு பிணைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். ஆனால், அவ்விழா கூட, மெசியாவின் உயிர்த்தெழுதல் இன்றி முழுமை பெறாது. உயிர்ப்பு திருவிழாவானது, நாம் பெற்றுக் கொண்ட திருமுழுக்கு வாக்குறுதிகளை புதுப்பிக்க அழைக்கிறது. இதன் வழியாக நாம் இருளை ஒதுக்கி ஒளியை ஏற்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும், திருமுழுக்கு வாழ்வளிக்கும் அடையாளமாக இருக்கிறது. அதிலிருந்து விலகாதிருப்போம். திருமுழுக்கு வழியாக வாழ்வளிக்கும் அழியா முத்திரையானது நமது இதயங்களில் பொறிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப வாழ்வோம். அன்பு செய்து, நன்மைகள் புரிந்து, சாவை வென்று உயிர்த்தெழுந்த ஈசோவுக்கு சாட்சிகளாக மாறுவோம்.

நிறைவாக

நமது மறைமாவட்டத்தை சேர்ந்த மக்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். நீங்கள் புனிதப் பயணங்கள் மேற்கொண்டீர்கள். துன்பங்களின் வேளையில் மனம் தளராது பெற்றுக் கொண்ட நம்பிக்கையில் உறுதியாக நின்றீர்கள். பங்குத் தளத்தில், திருவழிபாடுகள், பிறரன்பு பணிகள், உறவிய கூட்டங்கள் வழியாக நீங்கள் நம்பிக்கை சமூகத்தை கட்டியெழுப்புகிறீர்கள். இது உங்கள் நடுவே தொடர்ந்தும் நடப்பதாக.

எனக்காகவும் நீங்கள் இறைவனிடம் வேண்டுங்கள். என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மறைமாவட்டம் சார்ந்த பணிகளை அர்ப்பண உணர்வுடன் மேற்கொள்ள எனக்காக வேண்டுங்கள். மறைமாவட்டம் முன்னெடுக்கும் செயல்பாடுகளின் உங்களின் செபமும் ஒத்துழைப்பும் ஏரானமான செயல்கள் செய்ய பேருதவியாக இருக்கிறது. குறிப்பாக முதன்மை பேராலய பணிகளுக்காக உங்களுடைய ஒரு நாள் ஊதியத்தினை தாராள மனதோடு கொடுத்தீர்கள். அந்த காணிக்கைகளோடு பிப்பிரவரி மாதம் 17 ம் தேதி நாம் நமது மறைமாவட்ட முதன்மை

பேராலயத்திற்கு அடிக்கல் நாட்டினோம். மிக முக்கியமாக, மார்ச் 19, புனித யோசேப்பின் திருநாள் அன்று சிறப்பு திருப்பலி மற்றும் நவநாள் ஒப்புக்கொடுத்து செபித்து நாம், நமது முதன்மை பேராலயப் பணிகளை தொடங்கி இருக்கிறோம். உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு உங்களின் கருத்துக்களுக்காகவும் இறைவனை வேண்டுகிறேன். இந்த ஆண்டு உங்களுக்கு தரப்பட்டுள்ள உண்டியலின் காணிக்கையானது மறைமாவட்ட முதன்மை பேராலய பணிகளுக்காக பயன்படுத்தபடும். உங்களது தியாகத்தின் காணிக்கைகளை அதில் நிறைவாக கொடுக்கவும் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். முதன்மை பேராலயம் மிக விரைவாக கட்டியெழுப்பப்பட தொடர்ந்து செபியுங்கள்.

நமக்காகப் பாடுகள் பட்டு, வாழ்வளித்த ஆண்டவரின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் நாட்களாக புனித வாரம் அமைவதாக. உயிர்ப்பு திருவிழா அன்று உங்கள் இதயங்கள் முடிவில்லா எதிர்நோக்கால் நிரப்பப்படுவதாக. இயேசுவை தரிசிக்கும் நாளாக அன்றைய தினம் மாறுவதாக. மகதலா மரியா, திருத்தூதர்கள், எம்மாவு சென்ற சீடர்கள் உயிர்த்தெழுந்த ஈசோவை தரிசித்தார்கள். எம்மாவுக்குச் சென்ற சீடர்கள் ஈசோ அப்பத்தை பிட்ட போது, அவரை அடையாளம் கண்டனர். நமது திருப்பலி கொண்டாட்டம், நற்கருணையில் ஈசோவை சந்திக்கும் இடமாக அமைவதாக. பிறரிலும் ஈசோவை கண்டு வாழ்வை அர்த்தமிக்கதாக்குவோம். உங்கள் உள்ளங்களை, ஈசோ அன்பால் நிறைத்து அருளால் வழிநடத்துவாராக.

உயிர்த்தெழுந்த ஈசோவின் ஆசி உங்களோடு என்றும் தங்கியிருப்பதாக!

ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
19.03.2026

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்டம்

குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை மார்ச் 22, 2026 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியில் நற்செய்திக்குப்பின் மறையுரைக்குப் பதிலாக வாசிக்கவும்.

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India